# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# இயேசுவும் சகேயுவும்

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Janie Forest

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.



ஒரு நாள்
இயேசு
எரிகோவை
கடந்து சென்றார்.
யோசுவாவினால்
இந்தப் பட்டணம்
பல வருடங்களுக்கு
முன்னால்
அழிக்கப்பட்டிருந்தது.
இப்போது அது திரும்பக்
கட்டப்பட்டு அங்கு
அநேகர் வாழ்ந்து
வந்தார்கள்.



சகேயு வரிப்பணத்தை சேகரித்ததினாலே எரிகோவில் உள்ள மனிதர்களுக்கு அவனை அதிகமாக பிடித்திருக்க வாய்ப்பில்லை.  சகேயு கொஞ்ச பணத்தை அரசாங்கத்திற்கு கொடுத்தாலும் - நிறைய பணத்தை தனக்கென்று வைத்துக்கொண்டான்.

வரி வசூலிப்பவனாக இருந்ததினாலே சகேயு மிகுந்த பணக்காரனாயிருந்தான். அந்த பகுதியிலே அவனுடைய வீடு மிகவும் பெரிதாகவும், அழகாகவும் இருந்திருக்கலாம்.



ஆனால் அவன்
குள்ளனாயிருந்தான் - ஆனால்
பணத்தில் குறையுள்ளவனல்ல,
உயரத்தில் குறைவாயிருந்தான்.
அவன் மற்றவர்களைப்போல
உயரமாக வளரவேயில்லை.





இயேசு எரிகோவிலிருக்கிறார் என்று கேள்விப்பட்டபோது, குள்ளனாய் வரி வசூலிக்கும் சகேயு தான் தேவனுடைய குமாரன் என்று சொல்லிய நாசரேத்து மனிதனை பார்க்க விரும்பினான்.



ஆனால் ஜனக்கூட்டம் அதிகமாகவும் ...
ஜனங்கள் உயரமாகவும் இருந்தார்கள்.



சகேயுவுக்கு ஒரு யோசனை
கிடைத்தது!  அவன்
ஜனக்கூட்டத்திற்கு முன்பாகப்
போய் ... ஒரு சாலையில்
மேலிருந்து தொங்குகிற
மரத்திலேறி ... அவனால்
இயேசுவை பார்க்கக்கூடும்.



ஒரு காட்டத்தி மரத்திலேறி, சகேயு ஒரு வசதியான கிளையைக் கண்டு அதின் மேல் நல்ல படியாக அமர்ந்து இயேசுவுக்காக காத்திருந்தான்.



"எனக்கு நல்ல ஒரு
காட்சி கிடைக்கும்,"
என்று அவன்
நினைத்திருக்கலாம்.
"அவர் என்னைக்
காணாமல் நான்
அவரைப்
பார்ப்பேன்."

"சகேயுவே, சீக்கிரமாய் கீழே இறங்கிவா." அந்த சிறிய வரி வசூலிப்பவன் தன்னுடைய காதுகளில் கேட்டதை நம்பமுடியவில்லை. இயேசு மரத்தின் கீழே நின்றார். இயேசு அவனை நோக்கிப் பார்த்தார். இயேசு அவனைக் கூப்பிட்டார்!





இயேசு தன்னை
அழைத்ததை ஒரு வேளை
ஆச்சரியப்பட்ட சகேயு,
"இன்று நான் உன்னுடைய
வீட்டில் தங்கப்போகிறேன்,"
என்று இயேசுவின்
சத்தத்தை கேட்டு அவன்
வியப்படைந்திருக்கலாம்.
சகேயு கீழே விழுகிறவன்
போல வேகமாக
இறங்கி வந்தான்.

இயேசு தன்னுடைய வீட்டை காணவருகிறார் என்று சகேயு மிகவும் சிலிர்ப்பாக காணப்படான். ஆனால் ஜனங்களுக்கோ அது பிடிக்கவில்லை. இயேசு பாவியான மனுஷனுடைய வீட்டை சந்திக்க போகக்கூடாது என்று அவர்கள் குறை தெரிவித்தார்கள்.





சகேயுவுக்கு
இயேசு ஒரு புதிய
முழுமையான
வாழ்க்கையைக்
கொண்டு வந்தார்.



சகேயு சொன்னான்,
"ஆண்டவரே
நான் என்னுடைய
ஆஸ்தியில்
பாதியை
ஏழைகளுக்கு
கொடுக்கிறேன்.
நான் யாரிடமாவது
அநியாயமாய்
வாங்கியிருந்தால்,
அதை
நாலத்தனையாக
திரும்பக்
கொடுக்கிறேன்."

சகேயுவின் புதிய வாழ்க்கையை கண்டு இயேசு மகிழ்ச்சியடைந்தார், தங்களுடைய பாவமான வாழ்க்கையிலிருந்து திரும்பி சரியான காரியங்களை செய்வதை இயேசு பார்ப்பதற்கு மிகவும் ஆசைப்படுகிறார். இயேசு சொன்னார், "மனுஷகுமாரன் இழந்து போனதை தேடவும், இரட்சிக்கவுமே வந்திருக்கிறார்." எரிகோவில் அந்த நாளிலே, இயேசு சகேயுவை கண்டுபிடித்தார்!



இயேசுவும் சகேயுவும்

# தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

லூக்கா 19

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130


முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16